உ

சிவமயம்.

# தில்லையாளி ஸ்தலபுராணம்.

இஃது

பறங்கிப்பேட்டை

ஸ்ரீ அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள்

மாணாக்கர்களாகிய

தில்லையாளி

ஸ்ரீ நா. தப்பிரப்பசெட்டியார் அவர்களாலும்

ஸ்ரீ தெ. வேதியப்பிள்ளையவர்களாலும்

ஷை யூர் ம-ள-ள-ஸ்ரீ

வீ. சாந்தப்பிள்ளையவர்கள்

பொருளுதவியால்


காரைக்கால்,

சென்ற். ஜோஸெப்ஸ் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

1900.

## பொருளுதவி செய்தார் சிறப்பு.

:0:

சீர்பூத்த விண்ணவரு மண்ணவருந் தினம்பரவுந்
தில்லை யாளி
பார்பூத்த புராணமதை யச்சியற்றப் பொருளுதவிப்
பண்புற் றானல்
கார்பூத்த காராளர் குலத்துதித்துச் சிவனடியார்
நயக்க மாகக்
கார்பூத்த கரதலத்து மேதக்கோன் சாந்தப்பக்
கனவான் மாதோ.

---

தில்லையாளிக்குத் தமிழில் இரண்டு புராணமுள. இம்முதற் புராணம் வடமொழியினின்று மொழி பெயர்த்தது. மற்றொன்று இளங்கார முனிவர் சரித்திர முதலடங்கியது சேந்தன்குடி ஸ்ரீ நடராஜகவிராஜர் இயற்றியது. விரைவி லதனையு மிப்புத்தகம் விற்ற தொகையைக்கொண்டு வெளியிடுவோம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தில்லையாளிஸ்தலபுராணம்

## கடவுள்வாழ்த்து.

### காப்பு.

நல்ல செல்வமெய்ஞ் ஞானம் புகழ்...
தில்லை யாளிச் சிவனகந்தை தென்சொலாற்
சொல்ல விக்கிரம சோழ விநாயகன
வல்ல பாதம வணங்கி வழுத்துவாம்,

### சரணுகதரக்ஷகர்.

மாமேவு பரஞ்சோதி சச்சிதா னந்தநிரா மயமுல் லாசச்,
தேமேவு வேதாந்தந் தெளிவுவியா பகனகருணை நிகழ மூர்த்தி,
காமேவு திருத்தில்லை யாளியரன் சார்ந்தாரைக் காத்த நாதன்,
பூமேவு பாதமலா போதமலர் புனைந்துதினம புகழ்ந்து வாழ்வாம்.

### பெரியநாயகியார்.

மருமருவு மலர்க்கொடியை வேதமுடி விளங்குசுடர் மணி
யை ஞானப, பொருணசவு செழுங்கருவைப் புவனமெலா மீன்ற
பசுமபூவை மாலை, யருணயன பூரணியை யாரணியைத் திருத்
தில்லை யாளி வாழ்வை, யிருநிலமவா னகமயனமால புகழ்பெரிய
நாயகியை யிறைஞ்சி வாழ்வாம. (௨)

### நடராசர்.

ஞானமொரு திருவுருவாப் பரமசுகந் திருமுடியாய் நவிலு
ஞ் சத்தி, யானமொரு மூவகைய மலாவிழியா யருள்சிறந்த வங்
கையாகி, யானொன்று நவிருமிடந் திருவடியாய் நிறைந்தவுயி
ரவைக்கு ஞான, தானநடம புரிதருந்தென் றில்லைவன நடராசர்
சரணம் போற்றி. (௩)

### வேறு. தக்ஷிணாமூர்த்தி.

பின்ன மறைப்பை யடிப்படுத்திப் போதத் துகளை யகட்டட
க்கி, யென்னைப் பரமசுகமுடிமே லிருத்தி யருளுந் தனதுசத்தி,
தன்னை வதனத் தமைத்தருளித் தடங்கா ளிரண்டுந் தானாகி,
மூன்று மொலியாள் மருவுகுரு மூர்த்தி கீர்த்தி வழுத்துதுமே, ()

### வேறு. வீரபத்திரர்.

தருணவெயில் புரிமுடிக ளாயிரமீ ராயிரமாந் தடம்பொற்
றோள்கள், திருவாதன் சேர் நேத்திரமூ வாயிரமவெண் பிறையெயி
று செய்ய மேனிய, பெருமிதமா மரிபிரம ரெண்ணிலசிர மாலைக
ளும் பிறங்க வென்றும, மருவுபுகழ் செயம்படைத்த வருள்வீர
பத்திரர்தாள் வணக்கஞ் செய்வாம். (௫)

### விநாயகர்.

ஒருகலையம் புலிமருவுஞ் சடைக்காட்டெம் மானிம
கவீன்ற, பொருவிலபெருந் தவங்கள்முயல பிடிகாணப்ப
கப் பொதுவி லாடும், பெருமிதயஞ் சானனனசிர பெறுநதல
யாளிபரவ பெற்ற ஞானம, வருமதவா ரணன்கருணை பூரணகா
ரணனபாதம் வணங்கி வாழ்வாம். (௬)

### சுப்பிரமணியர்.

அஞ்சுதலை யமரருறு தன்சுதலை யானருளு மயிலோன் சூர
ன், விஞ்சியெழு தலைநாலு தலையாகத் துதுரைத்த வீரன் மூன
ஞான், தஞ்சமெனும பத்தருக்கே யாறுதலை யாயாறு தலைசேர்
கோமான், செஞ்சரண தாமரையை யொருதலையாய்ப பணிதலை
யே செய்கு வோமே. (௭)

### வேறு. சரச்சுவதி.

ஆக்குசொற் சுவைமண மனைத்தும வீசவுந்
தேக்குநற் பொருட்சுவைத தேன்று ளிக்கவும்
பாகமைப் பாரதி பாத தாமரை
வாகினு மனத்தினு மலர்க தென்றுமே. (௮)

### ஆளுடையபிள்ளையார்.

அள்ளிக்கொண வரிலையமுத கமமை தந்தபொன்
வள்ளமுணா பாலறு மதுர வாய்மொழிப்
பிள்ளைசெஞ் சரணனை பிரச மாமல
ருள்ளப்பைந் தடத்திடை மலர வுன்னுவாம். (௯)

### ஆளுடையவரசுகள்.

பூவினு நலம்பெறு பொலிவு மெல்லிதப்
பாவினு மினிமையும பரிவுங் காணுறச்
சேவியல பரமனை யேத்துஞ் செமமொழி
நாவினுக் கரசனை நயந்து போற்றுவாம். (௧0)

### ஆளுடையநம்பிகள்.

வேதனு முவணனு மெலியக் காரிருட்
பாதிரா வெய்பிரான் பாத தாமரை

தூதினிற் படாவுந் தொழும்பு கொள்ளவு
மோதலிற் சிறந்தசுந் தரனை யுன்னுவாம. (கக)

வேறு. ஆளுடையவடிகள்.

நாய னடிமை யுவந்துசிவ ஞான போதம் விரித்துரைக்கத்
தூய வுடலு மாருயிருஞ் சூழும் பொருளு மவறகளித்து
வாயி னின்தாய் மனத்துறு மதுரத் திருவா சகதேனைப்
பாய வுலக மிசைப பொழியுந தமிழ்மா முகிலைப் பரவுவாம். (கஉ)

வேறு. திருத்தொண்டர்கள்.

மெய்திரு நீற்றுக் காக்கி விழிசிவன் வடிவுக் காக்கிக்
கைசிவ பூசைக் காக்கிக் கருத்துமெய்ச் சிவத்துக் காக்கிச்
செய்யவாய் புகழுக் காக்கிச் செவிசிவ கேள்விக் காக்கித்
துய்யரா ஞானத தொண்டர் துணையடி தொழுவாம யாமே.(கங)

வேறு, அவையடக்கம.

வனசு நூலின் மழைமத வாரணந்
தனைய டங்கப பிணித்திடுந் தன்மையா
மனகரீச ரளவில பெருமபுகழ்ப்
புனையுங் காதையென் புன்சொலிற் சேர்ப்பதே. (கச)

மருக்கொ ழூக்குதண் மலவிகை முலலைபோ
லெருக்குஞ் சூடி மிறையவர் நூல்வலலோர்
பொருக்த மாகப் புகன்றிடு பாடல்போற்
றிருதத மிலலவென செய்யுளிற் சேர்பபதே. (கரு)

---

## புராணவரலாறு.

சால மாசினி சந்தனங் குங்கும
மால சோக மடமபு கடம்புவெட்
பாலை தாதகி பாதிரி கூவிள
மேலம வஞ்சி யிலஞ்சி யுதும்பரம. (க)

தாது மாதளை சண்பகம் பஞ்சரம்
போதி கோங்கு புரசுபுன் னாகமவேய்
சூதம வாழை சுரபுனனை பூகதஞ்
சாதி வன்னி தமாலம் நாரதமே. (உ)

முலலை மவ்வல் முளரி குவலய
மலலி கையிரு வாட்சிநீ லோற்பலங்
கல்ல காரங் குமுதங் கயிரவ
மலல பிச்சி நறுஞ்சிறு சண்பகம். (ங)

இனைய பூந்தரு யாவுங் கொடிகளு

கனையும் போது கனையு மதுக்களுங்
கனியும் பிஞ்சும்வண் காயுந் தளிர்களுந்
தினமு நல்குஞ் செழும்பரு வந்தொறும். (௪)

மானி னோடு மருவும் புலியினம்
யானை தன்னோ டினைந்து மடங்கலக
மேன மின்றி மெய்யெயி யுமரவமுந்
தான மெங்குந் தபவின் மருவுமே. (௫)

தவங்கள் செய்யுஞ் சதுரர் குழாங்களும்
பவங்கள் மாற்றிய பத்த ரினங்களுஞ்
சிவம்பொ ருந்திய சிந்தையர் கூட்டமு
முவந்த சித்தர்கொ ளுத்தமர் சங்கமும். (௬)

சரியை செய்யுந் தபோதன ரீட்டமுங்
கிரியை செய்து கிளர்வோர் தொகுதியு
முரிய யோகி னுறைவோர் கணங்களு
மரிய ஞான மணைந்தோ ரவைகளும். (௭)

எங்கு மெங்கு மிலங்கு நலத்தது
துங்க மான துறவுக் குறைவிட
மங்கண் வானத மரர் துதிப்பது
தங்கு மீசன் றருமம் வளர்ப்பது. (௮)

குலவு மாயன்வை குந்தமு மிந்திர
னிலவு சொர்க்கமு நீதியின் வேதியன்
மலைவி லாதம னோவதி யுந்தின
மிலகு கீர்த்தி யெடுத்துரைக் கின்றது. (௯)

இந்த மேன்மைபெ நாளு மிசைந்துசிர்
நந்து றுத நயிமிச மாவனா
மந்த கலவனத் தபயிகை பாகனைச்
சிந்தை செய்யுஞ் செழுந்தவ ரெண்ணிலார். (௧௦)

அலைகு லாவு மருங்கடல வற்றினு
மலைகு லைந்து மகிதலம் வீழினு
நிலைந டுங்கி நெடியபில மெய்தினுஞ்
சிலைவி லான்பதஞ் சிந்தை மறந்திடார். (௧௧)

தொக்கு வேள்வி தொடங்கி முடித்தபின்
மிக்க தண்புன லாடி விருப்பொடு
தக்க செய்கட னாற்றிச் சகலரும
புக்கி ருப்பப் புராணிகன் சூதனும். (௧௨)

எய்தி னானங் கிருந்த விருந்தவர்

செய்தி கேட்டெதிர் சென்று சிவகதை
மெய்த ழைத்த விரத சாதனா
முய்தல் வேண்டி யுவந்து திருவுளம். (௧௩)

இங்கு வந்தனை யென்றவர் வந்தனை
தங்கு மாசெய்து சார்பன்ன சாலையின்
மங்க ளத்த வருக வருகென
வங்கண் மாதவர் தாங்கொண் டணைந்தனர். (௧௪)

ஆத னத்தி விருத்தி யருக்கிய
மீதல் செய்து முகம னியம்பியே
போத மாதவா வெள்ளிப் பொருப்பினைச்
சோதி யாதவர் சூழ்வது போலயல். (௧௫)

இருந்து கூறுவ ரெந்தைநின் வாய்மலர்
பொருந்து கின்ற சிவகதைப் புத்தமு
தருந்த வெஞ்செவி யாசையின் மிக்கன
வருந்த விலபிர மாண்ட புராணமுன். (௧௬)

செப்பு போதுதென் றில்லை வனக்கதை
யொப்பி லாததென் றேதினை யக்கதை
யிப்ப கற்க ணியம்புக யாமுயத்
தப்பி லாதத போதனர் செல்வமே. (௧௭)

என்னச் சூத னிருகண் முகிழ்த்தரன்
றன்னை யோர்ந்தித் தலத்தின் மகிமையை
யுன்னி யுன்னி யுடலம் புளகெழ
மின்னு கண்கள் விழித்திஃ தோதுவான் (௧௮)

ஆதி காலத் தருணந்தி யிக்கதை
சாது வான சனற்குமா ரம்முனிக்
கோத வம்முனி யுத்தம னென்குரு
வேதங் கடைவற் கோதவம பேலையோன். (௧௯)

எனக்குக் கூறின னிக்கதை புண்ணியந்
தனைத்த னக்கதைத் தனிவரு மினபினை
முனைப்பின் முத்தியை நலகிடு முன்வினை
யனைத்து மாறறும பவமு மகற்றுமே. (௨௦)

எண்ண மிட்ட வெவையுங் கொடுத்திடும்
வண்ண மாக்கதை மாதவர் கேட்கவென்
றண்ணல் சூத னருளின னம்முறை
வண்ண மெய்த்தமிழ்ப் பாடலின் வாழ்த்துகேன். (௨௧)

வேறு.

பன்னுபுகழ்த் தில்லைவனம் நரசிங்கம் வீரபத்ரர் பகர்மால் பூசை, பொனனிமய வுமைபூசை தீர்த்தமே திட்களங்கன் புராண மேன்மை, யெனனவருஞ் சருக்கங்க ளெட்டினு லத்தலத்தி னிய ல்பு சொலகேன், மனனுகலை யறிநதவாகள் பாவாணர் நகைபுரியு மரபு தோநதே. (உஉ)

## க. தில்லைவனச் சருக்கம்.

வனசமா துறையுந் தக்கணத தில்லை வனத்தின்மான் மியம் வரை தமமிற், கனகமால் வரையும நதிகளிற் பெரிய கங்கையு மொளிகளின விளங்குந், தினகர ஞெளியும் போலவே சிறந்த திவ் விய மாக்கதை யதனை, யனகமா தவத்தீர் வினவுமி னென்ன வரு மபெருஞ் சூதனு மொழிவான். (க)

வாரிசூ ழுலகிற் சிவதல மனேக மன்னிய வவற்றருள் வடி வாம், காரிமையார் பாகன் மகிழ்தல மைந்தாம் நவின்றிடிற் சிதமப ரங் காசி, சீரிய கடலூர் காஞ்சிமா நகரந் தெக்கணத் தில்லைமா வனமே, யூரிவை யைநதிற் றெக்கணத் தில்லை வனமிகச் சிறந்ததா மூரைக்கின். (உ)

மேருவின் றென்பா லைம்பது கோடி விலாசமாஞ் சம்புத்தீ வதனிற், சாருமெய்ப் பரத கண்டமேற் கனகந் தரளமமெண டி ரைதரு பொன்னி, சேருமயோ சனையொன றடுதததென் கரையி ற் றிரைக்கடல் மேற்கரை தன்னி, லோருமா மறைக்காட் டுத்த ரத் தைந்து யோசனை யளவினில விளங்கும். (ங)

கலையெலா நிறைநது களங்கமொன் றில்லாக் கதிர்மதி கோடி யின் குழாம்போல், விலையிலா துபாந்த வொளிவளா தரளம விர விமே குவிநதவெண் குவைபோன், மலைவிலா பாத மலைவிலா தெண்ணு மாதவா திருநதிய வுளமபோற், றொலைவிலாக் கருணைத் தேசிக ருளுந் தூயமெய்ஞ் ஞானமா மதுபோல. (ச)

விளஙகிமே யுயர்ந்த கயிலைமா மலையின் விரவுபன் மணிகளுந் துலங்குற, துளங்கவில் கனக மணடப நடுவிற் சோதிசே ரரியணை மீதில், வளமபெறு முனிவர் பிரதம கணங்கள் வழிபட வெழிலு மை யிடப்பா, லுளங்களிக் திருப்ப சித்தியா னந்த வுருவியாக் கோடிசூ ரியர்போல். (ரு)

வீற்றினி திருக்குஞ் சங்கர னொருநாள் விமலையி னொடுவிளை யாட, லாற்றியே யிருக்கும் வேலையி னந்தி விமலனு ரனுமதியில் லாமற், போற்றுமிந திரனை விடுத்தன னென்றேன் புகுதலும் பரசி வன் பார்த்தே, யேற்றநம் மேவ விந்தியிங் கணைந்த வேதுவார் காவிரித் தென்பால. (சு)

தக்கண தில்லை வனமதா கென்னச் சபித்தலு மிந்திரன் பய ந்து, செக்கராங் கமலச் சேவடி யிணைமுன் றெணடெனப பணிந்து கை கூபபி, பக்கர வணிந்தாய் கருணைவா ருதியே யமலனே யறி விலா தெளியேன், புககவிப் பிழையைப் பொறுத்தருள் சிறியோர் புரிபிழை பொறுப்பரே பெரியோர். (எ)

என்றுவாய் புதைத்து வருந்தியே கிற்ப விறையவன் றிருவுள மிரங்கிக், களறிலீ வருந்தா தொழிகதென் றில்லைக் கானென வுறை திசில காலஞ், சென்றபி னுங்கு வந்தரு ணடனஞ் செய்குதுந் தரி சனஞ் செய்வா, யன்றுநின சாப மகலுமென றருள வவனவிடை பெற்றுளந் தெளிந்து. (அ)

அண்ணனிக் கிரகம் புரிதலா ருயிருக் கருளென வாகம மிய ம்பும், வணணமின் றறிந்தே னென றுதென் றிலலை வனமென விந் திர னிருந்தான், றிண்ணமா நந்தி தேவனைக் கயிலைச் சிவனெம தனுஞையில் லாம, னணணுமிந் திரனை விடுத்தலா லெவரு நயந்த கொள் ளிடநதி வடபால (௯)

உத்தர தில்லை வனமென வுறைதியுனையுறு சாபம்விட் டகல, வத்தல மிசைநாம் ஞானவம் பலத்தி னனந்தத் தாண்டவம் புரி வோஞ், சித்தமன் புருகத் தரிசனஞ் செய்தி நீருமிச் சாபமென் றியமபி, யத்தகு நடனஞ் செய்தவவ சாப மகற்றின னெங்கணு மகலான். (௧0)

திலலைமா வனமா யறிவுடைய பொன்னித் தென்கரை யிந்திர னிருபபச், சொலலுநா ளநேகஞ செயறபி னன்கு சுருதியுந் துதி செயும் பரமன், செலலுமா தவாக ளெண்ணிலகோ டியர்தந திக ழொளி யோருரு வாகி, வல்லதென் றிலலை வனத்தியல காப்பவா மாசிலாப பொறபொது வாக. (௧௧)

மாலயன் வணஙக மலாமகள் வாணி வாழ்வுபெற றனமென மகிழச், சீலமா தவத்து முனிவரர் யாருஞ் செயசெய வரகர வெ ன்னச், சாலவே பூத கணத்தர்துந துபிகள் தண்ணுமை முதலிய வியமபாக, கோலமா துமையாள் பார்த்தகங் குளிரக் குவலயம் பு கழ்படைத் தோங்க. (௧௨)

எழுதிசை யவரு மளவிலாப் பல்லாண் டிசைத்திட நாரதன் முதலோா, தொழுதிசை பாட வரமபைபா மருங்கு சூழவந் தெ ழிலயி ராணி, பழுதிலசை யாம லருளென வாழ்த்தப் பணிகிளர் சி றையளிக் குலத்தின, றெழுதிசை வலமென குழல்செறி முனி வர் தோகையர் மங்கல மேந்த. (௧௩)

துடியினிற் சிருட்டி யமைத்தகை திதிசெஞ் சுடர்விடு மங்கி யிலொடுக்கம, பழயிமைட யழுந்த முயலகன் முதுகிற் பதிதிடு

பாதமேற் றிரோத, மடியவர்க் கருளு முத்திநூக் கியதா ளஞ்செழுத் தவயவ மாக, விடியுமா கிசிபோ லிந்திரன் சாபம் விடியவே திருவுள மிரங்கி. (௧௪)

செஞ்சடை யாடப் பிறைநதி யாடத் திருச்செவி மணிக்குழை யாடக், கஞ்சவாண் முகத்திற் கவினிருந் தாடக் கருணைமுக் கண்ணினு மாட, வஞ்சன மிடற்றின் பாசொளி யாட வாரமா வி கையசைந் தாடக், குஞ்சித பாத மாடவா னந்தக் கூத்தனு ராடினார் கூத்து. (௧௫)

மழைமுகங் கண்ட பயிர்கள்போற் றொலையா மாநிதி பெறும் வறியவன்போற், றழைநிலா விரிக்கும் பூரண மதியந் தனைத்தினங் கண்டபாற் கடல்போல், விழைவுறு பருதி கண்டபங் கயம்போல் வியன்புயல் கண்டமா மயில்போற், பிழைசெயா குலங்க டவிர்த துள மகிழ்ந்து பேசரு மற்புதம் பொருந்தி. (௧௬)

ஆடிய நடன மமரர்கோ னோக்கி யகம்வெயில் வெண்ணெய்போ லுருகி, நீடிய விழிகள் பொழியுநீர்த் தாரை நெடுநிலஞ் சேதக மாக்க, வாடிய வுடலந் தடித்துமெய்ப் புளக மலிதருரோமாஞ்சலி முகிழ்ப்பப், பாடிய பரமா னந்தவா ருதியிற் படிந்தனன் சாபமு மகன்றான். (௧௭)

இருநில மிசைவீழ்ந் தெட்டுமைந் துறுப்பு மிசைந்திடப் பணிந்துகை கூப்பி, யருவமே யுருவே யருவுரு வடிவே யவையெலாங் கடந்தசிற் கனலே, குருபர கருணா கரபரா பரனே குணங்குறி கடந்தமெய்ப் பொருளே, திருமலா சடசித் தனைத்தையு நடத்து சித்ததென் றில்லைநா யகனே. (௧௮)

கண்டபூ தாதி நாதநா தாந்தங் கடந்ததோர் பெருவெளிக் கதிரே, யண்டமோ ரணுவாய் வரும்பெரு மையனே யணுவுமோர் பகிரண்ட மாகக், கொண்டநுண் ணியனே கடலொரு துளியாய்க் குறுகவே நிறையருட் பெருக்கே, விண்டுவே தியன்மே லுள்ளவர் துதிக்கும் விமலதென் றில்லைநா யகனே. (௧௯)

ஞானவா ரமுதே முற்றுணர் விளக்கே நவிலரு மதுரமெனு கனியே, மோனமா தவத்தோர் பருகு செந்தேனே முடிவிலா மாணிக்க மலையே, யானவே தாநதத் தருவிடை மலர்ந்த வணிமலர் மொய்த்தமா மணமே, மானமே யுயிரே யுயிரினுக் குயிரே வாததென் றில்லைநா யகனே. (௨0)

எனப்பல துதித்தே யருணட ராச னிணையடி பின்னரும் வணங்கி, மனத்துறு விருப்பாற் கிழக்கிலோர் தீர்த்தம் வரைந்து போலுள தாக்கி, யெனைத்துப கரண விதங்கொடு மகுட வாகமப்

படியருச் சித்தான், கனத்தபே ரருளாங் கண்ணுதல் மகிழ்ந்து கருதிய வரங்கள்கே ளென்ன. (உக)

அடியனேன் பிழையைப் பொறுத்தருள் புரிந்தா யங்கணு வின்னும்யான் மயங்கிக், கொடியதீ வினையிற் குறுகிடா துனது குரைகழற் பத்தியே வேண்டு, மடிவிலா நடஞ்செய் யித்தலந் தில்லை வனமெனப் பேர்பெற வேண்டும், நெடியவித் தலத்தில் வழிபடு மவர்க்கு நீயருள் புரியெனப் புகன்றான். (உஉ)

புகறலு மவ்வா றளித்திறை மறைந்தான் புரந்தரன் சுவர்க்க முற் றிருந்தான், றகவுறு பெற்றுமை யுருவெடுத் தனைய தவவடி வுடையமா தவத்தி, ரிகலிலா வந்தத் தலத்தின்மான் மியத்தை யியம்பிடின் முடிவுறா வெனினும், பகருது மியன்ற வாறென வதனைப் பண்புறு சூதனு மொழிவான். (உ௩)

தக்கண தில்லை வனமென வொருகாற் சாற்றினோர் தீவினை தவிர்ந்து, மிக்கநற் பொருளுங் கீர்த்தியுந் தயவு மேவியன் புறுமனை யவளு, மக்களு மவர்தம புதல்வரு மருவ வாழ்ந்திகத் தின்பமார்ந் திருந்து, தொக்கவா னவர்கள் துதிசெயக் கயிலை சோதிமால வரையின்வீற் றிருப்பார். (உச)

விரும்புமத் தலத்தை நினைத்தவ ரிதயம் விமலமா யருந்துயர் நீங்கி, வருந்துறுங் காமங் குரோதமா மோக மதமிகு லோபமாற் சரியம், பொருந்துறூர் பூத பிசாசுவஞ் சனைகள் போக்குவ ரதிக வாழ் வெய்தித், திருந்திய பாரிற் புதலவர்மித் திரர்தந் திரளொடு கயிலைமே லுறைவார். (உரு)

அத்தல மதனைக் கண்ணினாற் கண்டோ ரதன்பெயர் காதினாற் கேட்டோ, ரத்தலந் தனையே யிதுவெனப் பிறருக் கன்புட னுரைத்திடு நல்லோ, ரத்தல வழியி னடந்துளோ ரந்த வருடபதி மருங்கினைச் சூழ்வோ, ரத்தல முறைவோர் தமைத்தரி சித்தோ ரனைவரு மமரரா யுறைவார். (உசா)

தில்லைமா வனத்திற் செனித்தவர் பிரமன் சிருட்டியி னலா வுறூர் தினமு, மல்லலு மிடியும பொருந்திடார் செல்வ மனுபவித் தருங்கதி யடைவார், தொல்லைநாள் விதியா லத்தலத் துடலந் துறந்தவர் நரகிடைப படியார், வல்லவா னவர்க்கு முயர்வரா லனோ மானிட ரெனினுமா னிடரே. (உஎ)

அப்படி யிடத்தின் வசித்திடு மவருக் காயிர மசுவமே தமும் பார், செப்பரும பவுண்ட ரீகமா யிரமுந் திகழ்தரு மக்கினிட் டோம, மொப்பில்கோ டியுஞ்செய் பலனமிக வுனதா முளத்தயி வொடுதரி சித்தார், தப்பில்சீர் கங்கா சாகர நானந் தக்கநூ றியற்று புண் ணியமாம். (உஅ)

யாவனே மெனினு மப்பதி வாச மியைந்துபர் சக்கர தீர்த்த
த், தாவலின் மூழ்கி யரியர்த்தே சுரனை யன்பருக் கெலாங்கொடுப்
பவனைப், பாவனை யோடு வலஞ்செய்து வணங்கிப் பலதுதி மொ
ழிந்தவர் கிளையோ, டோவிலா வினப மருந்தியந் தத்தி லுறுவாசா
யுச்சிய நிசமே. (உகூ)

பார்ப்பதி திருமா லிந்திரன் கடல்சூழ் பார்புரந் தளிக்குகிட்
களங்கன், சீர்பெறு வால கில்லியா பூசை செய்துவேண் டியவரம
பெற்று, ராதகிதிர் வசிட்டா காசிபா கவுச்ச ராணிமாண் டவியர்
சா பாலி, தீரதகிசேர் பிரகத் துததியர் வாம தேவர்காத் தியாயன
ர் குச்சர். (௩0)

அத்திரி வியாசர் கௌதம முனிவ ரருட்சவு னகர்சதா னந்
தர், வித்தக மேவு சரபங்கர் முதலா விரவிய சடிலமா முனிவ,
ரத்தமொன் றுயர்த்தி யொருபத மூன்றி யனவிடைப் புனவிடை
வதிந்து, ருத்திர மணியும பூதியும புனைந்து நோக்கரும பராபரச்
சிவனை. (௩க)

இரவிமண் டலத்தி லனலின்மண் டலத்தி னிந்துமண் டலத்
தின்மா நிலத்தின, விரவிய சிலவர் சிலவர்பூ சித்தார் வேதருத் தி
ரஞ்சிலர் செபித்தார், பரவுமைந் தெழுத்தைச் செபித்தனா சிலரி
ப் பான்மையா லவரவர் நினைத்த, வரமெலா மடைந்தார் திக்குப்
பா லகரும் மகிதலந் தாங்குபல் பணியும். (௩உ)

முப்பது கோடி மேலுமுக் கோடி முடிவிலா வமரரு மியாரு,
மப்பதி யரனைத் தைலநெய தயிர்பா லாதியா பரணவத் திரங்கள்,
தப்பிலகர்ப் பூரம் புழுகுகத் தூரி சந்தனஞ் சண்பகஞ் சாதி, யொ
ப்பில்மல லிகைகள் வலம்புரி யலரி யூசியல் லிகைகு நக் கத்தி. ()

தும்பைமந் தாரை கூவிள மருகு துளசியோ தனவகை ய
பூபம், பம்பிய தூபந் தீபமா தெரிசம பணிக்குடை கர்ப்பூர தீபம்,
நமபிய விவற்று லருச்சனை புரிந்து நன்னனின ரிட்டசித் தியினை,
யம்புவி யிடத்தி லத்தல மகிமை யறிந்தவ ரனைத்தையு முரைப்
பார். (௩ச)

புகழ்பெறு தில்லை வனமெழி லாளி புரந்தில்லை யாளியென்
றுரைக்கும, நிகழ்பெயா மூன்று மத்தலத் திறுநகா நிகரிலா வரி
யர்த்தேசுரர் மெய்த், தகவுசார்ந தாளைக் காதகவ ரென்னுந் த
குபெயர் பாசிவன் பொருந்தி, மிகவுநெய் சொரியும வேள்வியின
சுடர்போல் விளங்கியீற் றிருப்பனத் தலத்தில. (௩ரு)

குருந்துசங் தனமாப் பாதிரி புன்னை கோங்குமா தனைமகிழ்
பனசஞ், செருந்திவெய் நாவி தேமயால் கமுகு செண்பக முதல

பூந் தருவும், பொருந்திரு வாட்சி மல்லிகை முல்லை பூங்குட மல்லி கைக் கொடியும், நெருங்குபூஞ் சோலை சூழுமங் கரம சிதநிய மங்கள மாகும. (௩௬)

ஐந்துபா தகமு மவற்றிணை யாகு மருஞ்சம பாதக விதமு, மூந்துப பாவ விதமுமற றுள்ள வோதருந் தீவினை விதமுஞ், சௌந தழ லிடையி னிட்டபஞ் சினைபபோற் றீநதிடு மீதுசத தியமே, யிநதமா நிலத்தி னித்தல முதநிக் கேறிடு மேணிமேயன் றிசைப் பாா. (௩௭)

கல்விவேண் டுநரு மனைவிவேண் டுநருங காதலாற் புதலவர் வேண் டுநருஞ், செலவமவேண டுநரு கீர்த்திவேண் டுநருஞ் செகத லம புரக்கவேண் டுநரும், பலவித கவிதை பாடவேண டுநரும பயில்மணி யணிகள்வேண டுநரும, நல்லமேற் கதிவேண் டுநருமித் தலத்தி னணணியே புண்ணியம புரிவார். (௩௮)

இயமபுதென் றில்லை வனத்தினம் பத்த ரினத்தினைத் தினம் பரி வுடனே, நயம்பெறப் பூசை யியற்றினா தரங்க நாற்கடல சூழ் ந்தபா ரகத்தின், வியநதுபல போக மருநதிவாழ்ந் திருநது மேலவ லர் புரங்களை நகைததுச், செயம்பெறு பரம சிவனுல கெய்தித் திருவருள் பொருநதுவர் திணணம. (௩௯)

ஐபசார்ந் தாரைக் காத்தநா யகற்கு மம்பிகை பெரியநா ய கிக்குந, துய்யபா றயிர்நெய் தேன்சருக் கரைகள் சொலுங்கனி யாதிசந் தனங்கள், மையிலகர்ப் பூரந தூபதீ பாதி மகிழ்பல போ னக மபூபஞ், செயயபா னீதமா விரதவர்க் கநகள் சிறப்பொடு கொடுததுப சரிதது. (௪0)

நலலவில் வத்தா லாயிர நாமம் நவின்றருச் சனைபுரி வித்தா, றொல்லுவர் சகல விருப்பமும் பின்ன ரொழிவிலா முததியும பெ றுவாா, சொல்லுமித தலததி லொருபண மெனினுஞ் சொன்ன மோ ரணுவள வேனும், வலலவ ரளிக்கி னனேகமாம பலவாய் வ ழங்குவாா பலஞ்சொல வெளிதோ. (௪௧)

சொன்னதென் றில்லை வனததுறை பவட்குச் சுக்கிர வாரநா ணியம, மன்னிய மாலைப பொழுதபி டேக மருவுநை வேத்தியம் புரிநது, துன்னுசந் தனமவோ கொழுந்துகே தகைபபூந் துணர்க ளி னுலலங் கரிததுப், பன்னிசை நடனந துதிசெபம் புரிநது பத்த ருக் குதவியின் னடிசில. (௪௨)

அங்கவர் தம்மைப் பூசனை புரிந்தா ரவனியிற் புத்திரா திய ரோ, டெங்களுந் துநப்ப விபவமுற் றிருந்து மேலருண் முத்தி யெய் துவர்கள், துங்கமன் டபங்கோ புரமதில் சோலை சொன்ன வா கனங்களுற் சவங்க, ளிங்கிதத் துடனே புரிபவர் நாளு மிகபா

சுகங்களும் புரிவார். (சங)

பெரியகீழ்க் கடலின் மேற்கரை யிருக்கும் பெரும்புகழ்த் தில்லைமா வனத்தின், மருவிய மகிமை நவின்றன மினிமேன் மதனனைங் கணையையும வாட்டித், திருவருள் விளக்கான் மூலவா னவமாந் திமிரம்வென் றொருபொரு ளுணர்ந்தீர், வெருணர சிங்க மிரணிய னிரத்த வெறியினுற் புரிசெயல விரிப்பாம். (சச)

ஆகத் திருவிருத்தம். அக.

## உ. நரசிங்க சருக்கம்.

தானவர் குலக்குரிசில் சாலவலி யுள்ளான்
வானவர் குலத்தினை வருத்துதறு கண்ணான்
கானவரி வெம்புலி தடுத்தசுழல் கண்ணா
னனபெரு மூச்சினச லங்களை யசைபடான், (க)

கூற்றுவனு மஞ்சுறு கொலைதொழிலின் மிக்கான்
றோற்றுபிர சண்டவளி தோறகும்விசை யுள்ளா
னேற்றுவட வைக்கனலி னேறுசின முள்ளான்
பாற்றினம் வலஞ்சுலவு பைங்குருதி வேலான். (உ)

வாருதிக ளேழையு மடக்குபில வாயான்
காரிடியு மூட்கிடு கடுங்கொடிய சொல்லான்
பாரும்வெடி பட்டிட நடந்திடு பதத்தா
னொருமிரு வெண்பிறை யமைதந்த வெயிற்றான். (ங)

ஓதரிய தீவினைக ளோருருவ மெய்தி
மேதினியி லுற்றவென மேவும்வடி வுள்ளான்
மாதவர்கள் வானவர்கண மானிடவர் சித்தர்
பாதலரு மஞ்சவெகு பாராசு செய்வான. (ச)

பன்னிரணி யப்பெயர் படைத்தவனோர் பாவி
துன்னிய பெருங்கடவு ளோர்பெயர் சொலாம
லந்நிலமு ளாரிரணி யாயநம வென்னச்
சொன்னவரை விட்டது சொலாரையடல் செய்வான். (ரு)

தேவர்தன தேவல்வினை செய்திட வந்தி
யாவன புரிந்துறையு நாளிலவ னுக்கு
மேவரிய விப்பியின் விளம்பும்விலை யில்லா
வோவரிய நித்தில முதித்தெனவோர் மைந்தன். (சா)

உதித்தன னவற்கவ னுஞற்றும்வினை யெல்லாம
விதிப்படி புரிந்தனன் வியனபுதல்வ னித்த

மதிக்கலை வளர்ந்தென வளர்ந்துவய தைந்திற்
றுதித்தமறை யோதுத ெருடங்குமுறை சொற்ருன். (எ)

சொற்றதை யுணர்ந்தினிது தூமறை பயிறறக்
கற்றகுரு மைந்தனிடை காதலி னணைந்து
மற்றவர் தமக்கெழுது மாண்பினிவ னுக்கு
மற்றமரு வாவிரணி யாயநம வென்று. (அ)

முன்னெழுதி யக்கர முறைப்பட வரைந்தே
யன்னதை யூகன்கையி லளித்திரணி யாய
வென்னவுரை செய்யவ தியம்பிலனம் மைந்த
னன்மைதரு மர்சுதனி ஞமமுறை செய்தான். (கூ)

செய்திட லு மேகுரு செவித்துணை புதைத்தே
யையெனவு ணர்ந்தவுணர் கோன்புடை யடைந்து
மையலுறு வாரெனநின் மைந்தனுரை செய்யும்
பொய்யுரையி ஞலெனது புந்திதளா வுற்றேன். (ய)

அவ்வுரையெ ஞன்மொழிவ தன்றவனை நின்முன்
செவ்விதி னழைத்துணர்தி யென்றினிது செபப
வெவ்வுரையி னேவலரை விட்டுவரு வித்துக்
கொவ்வைநிகர் கோபவிழி நோக்கியிது கூறும். (கக)

ஓதல்புரி விக்குமிவ ஞேதுமுறை சொல்லா
தேதுரைசெய் தாயதனை யிங்குமொழி யென்ன
நீதியுரை யாமலிவ னின்பெயரை முன்ன
ராதரவி ஞேதுத லு மங்கதை மறுத்து. (கஉ)

செங்கமலை கேள்வனுயர் சிட்டிபுரி வோனை
யங்கமல நாபியி னளித்துலக மெல்லாத்
தங்குதிதி செய்தமரர் தாமினிது துய்ப்பப்
பொங்குகட லாரமுது பொற்புட னளித்தான். (கங)

அக்கடவு ஞமமிகு மன்புடன் மொழிந்தேன்
புக்கசெய லீதறிஞர் புந்திமகிழ் மார்க்க
மிக்கரும நன்றென விசைந்திடுத லின்றிச்
செக்கர்விழி கொணடெனை சினத்ததுசொ லென்ருன். (கச)

ஓதுவது நன்றுன துணர்ச்சிமிக நன்று
தாதையொடு மைந்தன்மொழி தன்மையிது சாலுங்
காதுகரு டற்குமச கங்கதி பயிற்றும்
நீதமிது மாயநிலை நீயுரைசெய் யென்ருன். (கரு)

மாணகர மக்கர வருக்குமுறு மாபோற்
காணுமறி வுள்ளவர் கருததினு மிருப்ப

னேனுடைய வெண்ணிலுல கெங்கணு மிருப்பன்
றாணுளு மிருப்பனோர் துரும்புளு மிருப்பன. (௧௬)

என்றுரைசெய் தச்சுதனை யச்சுதனு மெண்ணி
யின்றென்மொழி பொய்த்திட லிலாதருள்செய் யென்ன
நின்றனனவ் வாளசுர னீதரைசேர் பெற்றி
யொன்றுபழு தில்லையெனி லோதுவது கேட்டி. (௧௭)

இப்பெரிய தூணிடை யிருக்குமது காட்டென
றுரைபயிலகட கக்கர முயர்த்திநனி யார்த்தே
யப்பெரிய தூணிடை யறைந்திடலு மன்பர்க்
கெப்பில்வரு மச்சுத னிரங்கிவரு கின்றான். (௧௮)

அண்டர்களி னுன்மனித ராலடர் விலங்காற்
றண்டமுத லானபடை யான்மடிதல் சாரான்
மண்டலமு மந்தரமும் வானுமுயிர் சாயான்
மிண்டுட லிரத்தநிலம வீழினு முளைப்பான். (௧௯)

என்னும்விதி யெண்ணியிணை யற்றபல னெல்லா
மின்னுசம ரத்தியனும் விரமவை யெல்லாந்
துன்னிநர சிங்கவடி லெய்தியுயர் தூணி
னன்னர்மதி போல்வலிய நாரண னுதித்தான். (௨0)

கண்ணிணை கறங்குபு கனற்பொறிகள் சிந்தி
விண்ணுறு புகைப்படலம் வீசிமெய் யுரோமம்
வண்ணவரி வச்சிர நிரைத்தமுறை மானத்
துன்னென நடுங்கியசு ரப்படை துளங்க. (௨௧)

மாமதி வகிர்ந்தனைய வாயெயி றிலங்க
வேமமுறு மால்வரை யிருங்குகையை யொப்ப
நாமமுறு வாயொலி நடுங்குமிடி கோடி
தூமமலி யப்புவி துளங்கிட முழங்க. (௨௨)

வாளுகிர்க ணீளுவயின் வாளிகளின் மன்ன
நீளமலி வால்பெரு நெடுந்திசையை நீவக்
கோளுறு சினத்துவட வைக்கனல் கொதிப்ப
வாளரி யெதிர்ந்தவுணன் மூன்பெயி றதுக்க. (௨௩)

அங்கிரணி யன்மனதி லச்சமுற வின்றித்
துங்கவிகல்செய்வது தொடங்கவுட லெங்கும்
பொங்குளை நிமிர்த்தடல் பொருந்துநர சிங்க
மங்கவனை யார்ப்புட னடுத்தன னெடுத்து. (௨௪)

தலத்தினிடை வைகியிருந் தாளிடை கிடத்தி
வலத்துறு நகத்தவன் வயிற்றினை வகிர்ந்து

பிலத்தைநிகர் வாயருகு பெட்பினொடு வைத்துக்
குலக்கடல்கள் போன்றுபெறு குங்குருதி வெள்ளம். (௨௫)

குடித்தவுண னாவிபடர் கூற்றிடை விடுத்தா
னிடிக்குரலின் முன்பருகி யிரத்தவெறி யாலே
படித்தலமு மண்டமு மளித்தருள்செய் பான்மை
விடுத்தவை முடித்திடு மிறைத்தொழில் விரும்பி. (௨௬)

விண்ணினிடை தாவுமுயர் வெற்பினிடை தாக்கு
மண்ணினிடை குதிக்குமவியன் மாதிர முலாவுங்
கண்ணினிடை யுதிக்கனல கருங்கடல் சுவற்று
நண்ணுபில வாயொலியி னண்டமு முடைக்கும். (௨௭)

மேருவென நின்றன மேதினி துளைக்கு
வாருதி கலக்குநெடு மாலவரை யசைக்கும்
பாரும்விடர் செய்யுமொரு பாதல வரைப்பிற்
சேருநில மேங்கியபா சேட னுநடுங்க. (௨௮)

இன்னநர சிங்கமற மெய்தியிட செய்ய
வுன்னரிய தேவர்களு மோங்குமுனி வோரு
மன்னுதிசை மன்னவரு மாலிடரு மண்டத்
தன்னிடை நிரம்பிய சராசரமெ லாமும். (௨௯)

மாதுயர முற்றகம் வருந்தியுழல் கின்ற
போதுசில வானவர்கள் போதுசெறி வேதன்
காதுதுயர் நீக்கியுயிர் காப்பது குறித்து
மீதுயரு மந்தர வியனகிரி யிடத்தின். (௩௰)

பச்சையொளி மிக்கொழுகு பார்ப்பதி யிடத்தி
னிச்சையுடன் மேவிசை யாழினவர் பாடச்
செச்சையணி கொங்கையவர் தெய்வமட மாதர்
நிச்சய லயத்தினொடு நின்றுநட மாட. (௩௧)

சித்ததுரி சற்றெளி தெரிந்தசிவ யோகர்
பத்தர்மிட லுற்றபல பாரிடர் துதிக்க
வித்தகமெய் நந்திநெடு வேத்திர மசைத்தே
யத்தனிசை யோதியவை யத்திடை யுலாவ. (௩௨)

அரியணையின் மீமிசை யருட்கட லிருந்த
[illegible]சென விருந்தசிவன் முன்புபயி னந்தி
[illegible]தரிவுற விடுபடலெதிர் சென்றுநிறை யன்பா
லரிமால் சரோசபத மாமுறை வணங்கி. (௩௩)

மங்கள சொரூபசாண் மாதுமை விளங்கும்
பங்கசர ணநிகழ் பகீரதி புனைந்த

துங்கசர ணஞ்சுக சொரூபசர ணஞ்சீர்த்
திங்களணி வேணியமு தேசர ணுனக்கே. (௩௪)

ஆலநுகர் வாய்சரண மஞ்சவரு கால
காலசர ணந்திரி புரங்கள்பொடி கண்ட
கோலசர ணங்குலவு மாரணிகள் கொண்ட
பாலவிழி யற்புத பராசர ணுனக்கே. (௩௫)

துட்டசன நிக்கிரக சோதிசர ணித்த
மிட்டசன ரட்சைசெயு மெந்தைசர ணெங்கட்
குட்டெளியு ஞானமுத வும்பரம கொன்றை
மட்டுலவு வேணியம லாசர ணுனக்கே. (௩௬)

ஒக்குநர சிங்கமவெறி யுற்றுலக மெல்லா
மேங்கவிடர் செய்யுமத னாலுயிர்க ளெய்தும்
யாங்களு மெலிந்தன மெழும்பறவை போல்வேந்
தாங்குமவ ரற்றவ ரெனத்தளர்தல் சால்போ. (௩௭)

சித்தபர ஞானசுக நீயிவணி ருப்ப
வித்துயர மாமனைய வேதுவது வென்னோ
வத்தனினை யன்றியினி யாவாநர சிங்க
மெத்துமிட லைக்கருவி வெற்றிகொள வல்லார். (௩௮)

ஐயநர கேசரியை யட்டிலை யெனிற்கே
ளுய்வதிலை யாமுமுல குள்ளவுயி யாவு
மெய்தரிய சின்னமீதா ரிமைபபொழு தெமக்கோர்
செய்யயுக மாகுமருள் செயதிகடி தென்று. (௩௯)

கூறிமுறை செய்யவருட் கோதைமண வாள
னீறிலருள் செய்துமன தின்னலொழி வீர்நீர்
சீறிவரு கினறநர சிங்கவிகன மாய்த்துத்
தேறும்வகை செய்துமென நாதனுரை செய்தான். (௪௦)

மானிட மடங்கல்புரி வன்மையுரை செய்தே
மானிட மமர்ந்தபர னாருளி னாலே
மேனிதிகழ வீரனதன மெய்வலி தொலைத்துத்
தானினிது செய்திடுஞ் சரித்திர முரைபபாம. (௪௧)

ஆகத் திருவிருத்தம் ௧௨௨.

## ௩. வீரபத்திரசருக்கம்.

ஆடலபெறறநர சிங்கவன்மிட லடக்கவெண்ணிகில வண்ட மேல், விடலறறசத ருத்திரமாபுவன மீதுவைகுபுவ னத்துறும், பாடலுற்றபுகழ் வீரபத்திரனை நெஞ்சினிற்பரம னுன்னலு, நீடலு

ற்றவிறை யருளினுவிறை நினைந்ததனமையை யறிந்தனன். (௩)

இந்தவேலையவ ணெய்துவோமென வெழுந்திரத்னமகு டங்கள்சே, ரிச்துகொண்டமுடி யாயிரங்களொளி யேலுமணடமுக டுற்றிட, வுந்துநெற்றிவிழி சுழலுமாயிர முகாந்தகாலவனல் காலவுஞ், சந்தமாபுய மிராயிரங்கடிகை மட்டுமுற்றபகை சாடவும். ()

நீள்கரும்புருவ மேகசாபமென நெற்றிமீதுலவி மீளவுங், கோள்செழும்பிறை யிராயிரத்தினிகல் வீரதந்தமொளி கொள்ளவு, மாள்பெருந்திசைக ளார்க்குமுக்ரவொலி யாவிருஞ்செவி மேலவு, மீள்கிலாதாண் வீரசத்திபிர சன்னவானனம விளங்கவும். (௫)

பிரமரெண்ணிலர்கள் மாயரெண்ணிலர்கள் பின்னுமற்றுமுள தேவர்கள், சிரசுயாவிகைக ளொன்றோடொன்றிடை செறிந்துமார்பிடை துவண்டிட, வரயநூபுர மிலங்குகண்டிகைக ளங்கதங்கடகம் வெயில்செயப், பாவுயிர்ப்பிலவரு கினறதூமநிரை பாரவான் முகிலின் மொய்த்திட. (௬)

சூலம்வேல்பலகை கார்முகஞ்சுரிகை துரோணமங்குச மலூயுதம், பாலமுற்கர முசுண்டியாழிபெழு பாசமவாளிகர வாளமே, சாலும்வீணை திரி சிகைகள்முட்டிகதை சாத்ரகாசமொடு கோட்டக, மாலும்வச்சிரம்வி ணைசனிதோமர யாதியாயபடை யெண்ணில.

கரதலங்களி னிருந்தவன்படைகள் காலவசகினி யுதிர்த்திடத், தாமிருந்திடு முயிர்பபெயூநதுபிர சடைவாயுவை விசைகியே, யுரனுறைந்தவட வானலங்களை யொடுங்கவெங்கனு மவிப்பவே, தரைநடுங்குதல்செ யாதிலங்குமிரு தாளபெயர்ந்துவரு காலையில

எட்டுவாளரவு கயிறெனக்கையி னெடுத்தொரொட்டுகுல வெற்பையுக், தொட்டவற்றினிடை சுற்பிமற்றவை துவங்குபயபரமெனத்தரை, விட்டெறிந்துவிளை யாடிநீலவரை கொலவெனக்கரயிசைகொடு, வட்டமாமதியை ரவியையங்கிரு கரங்கெனச்சுழல வைப்பன. (௭)

தக்கவாரிகளை வாரியுண்டுவரு தாகமானதவி ராமலே, தொக்கமாமுகில் பிசைக்தருக்கிவரு சுறவினுக்குவைவு தேடுவ மிக்கவீரகர சிங்கரூபமுள கோடிகோடிகண மிக்கன, பக்கமேவுபகி ரண்டகோடிசிறு பந்தடித்துவிளை யாடுவ. (௮)

அட்டகாசமொடு மேலெழுந்துதிசை யவனிமீதுகுதி கொள்வன, மட்டில்பற்பல படைக்கலங்களை வயங்கவங்கையி லசைப்பன, கெட்டராவுமிழு மாலகாலமென நீடுசாரதகு ழாமெலாந், துட்டரூபவிறை யாரவாரமொடு தொழுதுவந்துபுடை சூழ்வே. (௯)

எய்திவெள்ளிமலை மீதுவைகுபர மேசர்சேவடிவ ணங்கியே, யையவென்னைமன முன்னவந்தசெயல் யாதுசெய்பணிக ளென

னெனத், துய்யவீரனுரை செய்யவீசனிது சொல்லுவானினிய தே வர்பா, லுய்கலாதபய மிந்தவேலையுள தானதன்னைதையு ணர்த்து கேம. (கo)

இரணியாசுரனை நரமடங்கலுரு வெய்திமாயனடல் செய்தவ, னுரன்மிகுந்தவுட லுதிரமுண்டுவெறி யுறறியாவருமி ரங்கிடப், பாவுமும்பாக ணடுங்கவன்கொடுமை பண்ணுகின்றனனவ் வெகு ளியாம், விரவுமக்கினி யவிப்பவேணடுமுயா விண்ணுளோர்கள்மெ லி யாமலே. (கக)

போற்றுஞானவழி யோதிநன்கினிது போதிபோதனையி னுல வன், சீற்றவங்கியவி யாதுபின்னுமிடல செய்யினமமதுவி சேடமா, மாற்றலமேவுவயி ரவசொரூபமதை யங்கவன்கணெதா காட்டியே, தோற்றுரூக்கவுட றன்னைவைத்திகலசெய் தாலமெய்யினையழித் தரோ. (கஉ)

மீண்டுகின்றநர சிங்கவன்முகமும் வெய்யதோலுமிவ் விரண் டையுங், கொண்டுநீவிரைவின வருகவென்றிறைவர் கூறவீரனும்வ ணங்கியே, யண்டர்போற்றுமுப சாந்தரூபமுட னணையுமப்பொழு து தக்கண, மண்டுதிலலைவன மீதுமானிட மடங்கலுற்றதை யுண ர்ந்துதன். (கங)

முன்புசென்றினிப சொல்வினலறிய முறைமைதந்தையருள் சந்ததிக், கன்பினேதலின வோதுவானலைக னைத்துநல்லருண்ம னத்தின, விஞ்பமெய்துமவதை காத்தாாயவிமை பி னைதநானுமறி துயில்கொளு, மன்பிராணுமினி நீபலாதுபிறா யாவர்செங்கமலை ம னனனே. (கச)

ஆதியச்சவவ தாரமாகியுய ராரணங்களை நிறுத்திமேற், சீத வாருதியி னுடைம்வாவினை செ றிந்தவாவியல கோமபினை, காத ல்கொணடொரு கமடமாகிமேற கடலகடைந்தமலை தலைவரிந், மீதுகொண்டுசுர ரமுதமுண்டுவகை யேவவாவவி னளித்தனை. ()

கோவமென்னுமொரு கோலமாய்மணிசு லாவுவாரியினை மூக் கிடு, ஞாலமன்னதை யெடுததுவைத்தருளை நலகிவாமனவு ருப மா, யேலமாவலித னேற்றமாற்றியவ னெங்கநிக்கிரக முன்செய் தாய், நீலமெய்யனிர ணியனைவென்றனை கிரக்குவானவர்து திக் கவே. (கரு)

ஆதலாலகில லோககர்த்தரின தாண்மைசொல்லினில டங்கு மோ, வோதுமாருயிாகண் மீதநீயதுய ருறுமவ்வேலையருளுநவெ டுத், தேதமின்றியுறு துயர்தவிர்ப்பதுன தியல்புளக்குறிக ரதிகமா ய், மாதலத்தினுள் யாவர்புண்ணியமு மறையுமுந்தநீ யமைத் தனை. (கஎ)

இன்றுமானிட மடங்கல்மெய்யினை யிகந்துசாந்தவடி வெய்துகென், றனறுவீரனுரை செய்யவிண்டுபெரி காசமோடதிக கோபமுற், றென்றுமின்சொல்பல சொல்லுகின்றதனை யொழிசராசரவுருபமாய்த், துன்றுமிச்சக மழிப்பனிங்கடு தொழிற்குநான்முதலவனாவனால். (கஅ)

என்னைநிக்கிரகம் யாவர்செய்யுமவ ரெனதுபேரருளி னாலெலா, மன்னுகின்றனசொல சகலசத்திகளை மருவிவிப்பவை மாற்றுவே, னானனுசெல்வமுட னொளிருகின்றபொரு ளுள்ளயாவுமெனதொளியினான், மின்னுமுண்மையுணர் தேவர்யாவரினு மேலெனப் புகல்வ ரெனையே. (க௯)

அயனுருத்திரர்க ளெனதுசத்தியுறு மங்கிசத்தினரெ னாபியம், புபமுதித்தனன்முன் வதனமைந்தினொடு போதனப்பிரம னெற்றியின், வியனுருத்திர னுதித்தனன்பரவு வேதன்ராசதகு ணத்தினா, னுயருருத்திர னருததிகோபமய னானனுதாமதகு ணத்தினான். ()

இங்கிவர்க்குமுதல் நானெனக்குமுத லென்னவில்லையொரு தெய்வமுந், துங்கமானபிர பஞ்சமாக்கிய சுதந்தரக்கடவு ளாவனான், றங்குமென்னுடைய கோரமெய்த்தொழில சகிக்கவல்லவருமுண்டுகொ, லங்கண்மாகில மழிக்கவெண்ணின னறிந்துகொள்கவினி வீரனே, (உக)

காலமூன்றையு மியற்றினேனுரிய காலநாசமுமு றச்செய்வேன், காலகாலனென வாவனைகனுயர் கண்ணுதற்பரமன் வந்தனன், காலநீசர ணடைந்துநெஞ்சிடை சலக்கமற்றினிது செல்கெனக், காலவங்கிவிழி காலவாயிதழ் துடிப்பவவசொலிடி காட்டியே. (உஉ)

மூரல்செய்துசெய வீரனோதுமிக மூட்டியேகுனியு நீயடா, நாரசிங்கவுன தாணவமெயென்னவுனா ஞானமென்னவலி யெனைதான், வீரமென்னமொழி யென்னகாவலபுரி மேன்மையெனனவரு முன்னதி, காரமென்னவிடு சாவலோகசங் காரகர்த்தனா னலலனோ. (உ௩)

அவனையன்றியொரு தெய்வம்வேறுமொழி வார்கணாசமடைவாருடன, புவனிமேலுனவ தாரமானவை புகன்றிடுங்கதை யெண்செய்வோனா, இவனதெய்வமொரு பிருகுமாமுனிவர் செப்புசாபமதனால்வரு, புலம்பிரைந்துமுறு கின்றநீபரம னாவதென்னைபர தந்திரா.

— காரணத்துவ முனக்கில்லைபரம காரணன்பரம சிவனெனா, மாரணத்துமொழி தோகிலாயுனை யழிப்பனோர்நொடியி லன்னவன், வாரணத்துரிகொள் வரதனென்னிடமு மலரினானிடமு மின்னொ

டம், பாரகத்துமுள னல்லனென்னிலொரு பரமரேணுவுமி யங்குமோ. (உரு)

காரிகைப்பிர கிருதிரூபமுள கன்னகன்னுதல்பு மானவன், வீரியத்தையுன திடனில்வைத்தமையின் வேதனினனிடை யுதித்தனன், பாரிஷித்தகைமை யுணர்கிலார்களின் பாலனென்னவுரை செய்குவா, ரோருருத்திரனை யவனளித்ததுவு முண்மையன்றதனை யோதுகேம். (உகூ)

பூருவத்திலய னார்படைத்திடப் பொருந்தநீதியி னருந்தவ, கேரியற்றியரு ணீலலோகிதரை நெற்றியீதுறு தியானமுற், றுருமப்பொழுது நீலலோகிதரு மம்புயத்தனுத னின்றுவந், தேருறக்குலவு பூதசிட்டியை யியற்றினனிதனை மறைசொலும. (உஎ)

தூலசிட்டியை யயனியற்றுமுறை சொல்லுநல்வர மளித்தனன், சாலவுற்பவமோர் பத்துமந்தவிதி தன்படைப்பினி லெடுத்தனை, மாலுமுன்னுடைய கூர்மமோடுசிவன் மாலைமுத்தினடு வுற்றதும், வேலனின்கொடிய பன்றியின்னுலவை யேற்பதித்ததுமு ணர்ந்திடாய். (உஅ)

தக்கன்வேள்வியிடை யெச்சனுமனது தலையையான்முன மறுத்தது, மிக்கவன்குமர னைவேதனடு மெய்ச்சிரத்தினை நகத்தினற, கக்குசோரியொடு கள்ளவீசுரர் கபாலமானதும் மீசனார், தொக்கபோரினிரு கையினிற்றலை செறிந்துபோனது மறந்தனை. ()

எங்கிருந்தனது கைத்தலத்தினி லிலங்குசக்கரமி யைந்தது, சங்கரன்னுதவு தமகுணத்தொரு சமுத்திரத்திடையு றங்குநீ, மங்கலத்தொளிரு மரியசாத்துவித மருவுகின்றதொரு புதுமையே, கங்குவிட்டலவு துட்டர்பாலினுப காரமானதப காரமே. (௩0)

ஒடுக்குகின்றவனு கற்சுதந்தரனு முற்பவங்கள்புரி வோனுமெய், நடுக்கமற்றசிவ னென்பர்நீயென நவின்றிடாரறிவி லிரணியன டுக்கவென்றதோ ரகந்தையாலினை யிலார்கள்போலுனை மதித்தனை, யிடுக்கணைவந்துனை முடிக்குமாலரனை யெள்ளினாய்ப்பெரிய னீகொலோ. (௩க)

நிலாவுகின்றசிவ சத்தியாலுயிரு நிலமுமாதபரி யந்தமுங், குலாலசக்கர மெனச்சுழன்றுவரு கொள்கைநீசிறிது மோர்கிலாய், பொலாதமேககமதை யானளிப்பவுணர் புந்திசாலவு மயங்கினாய், கலார்கள்போற்றுபா னித்தனைக்தொழிலு நாடொறு நடாத்துவான். (௩உ)

தாருகாவன மிருந்தமாதவர் கபித்தசாபமொழிர் தீபமீ, தாரும்விட்டிலென நாசமானவலை யரனையுற்றிலை யன்றுநீ, நேரில்

பொன்னுருவ ஞய்வதிர்த்னையக் கிலேமைகண்டுமிறை மேன்மை மை, யோருகின்றிலேயிவ் வேளேயோனே யுன்னுவாயெனவ னேக மாய். (கூக)

திடத்திஞலுறுதி வீரபத்திரர் திருந்தவோதமுரை யாவையு ங், குடத்தையிப்படி மிசைக்கவிழ்த்திருகை கொண்டுமொண்டு சொரி கீரென, வடற்பொருந்துநர சிங்கஞர்செவி யதிலுறுதலை யகன்றன, வுடற்றுவாணமதுகை வீரனன்னதை யுணர்ந்துபின்ன ரிவை யோதுவான். (கூச)

சங்கரன்பர்ம னின்றுநின்னேநனி சங்கரிக்கவென யேவிஞ ன், மங்குலுற்றவிடி மாமரத்தில்விழும் வண்மைபோலெனது கோ பமு, னங்கமீதுவிழில யார்தடுப்பவாக ளற்புத்தியுட னழிகுவாய், சிங்கவென்றுபுரி யட்டகாசமொடு சீறியார்ப்பொலி சிறக்கவே. ()

இன்றுகொல்வனுனே யென்றுவீரனெதி ரேற்றபோதுநர சிங் கனுங், கன்றியார்த்துவெளி மேல்விழுந்துநனி கறுவியொப்பில்செ ய வீரனே, நின்றுவெலவனென வெணணும்வேலேயர னிலவுசோ திகன கோரமா, யொனறுமவனபகை முடிப்பதாயமர ரடரும்வ ண்ணமுள தாயதே. (கூரு)

ஆயசோதிமதி யொளியுமன்றுலவு மலரிதன்ஞெளியு மன்று மின், பாயசெவவொளியு மன்றுபாவகர் படைத்தபேரொளியு ம ன்றுபொற், றாயகல்லொளியு மனறுமாமணி துலங்குமெய்யொளி யு மன்றுமேன், மேடபாதமொரு நான்குகீழினுற மேவுவாதமொரு நான்குமேல். (கூஎ)

வட்டமாகிவர வோங்குபேரொளியுண் மனிதகேசரிமு கத் திலுங், கட்டமுற்சிதறு கண்களிலுங்குலவு காந்திதோன்றியன வொளியெலா, மட்டிலாவிரவி யொளியிஞென்றுபடும வண்ண மென்னவிசை வானதே, யிட்டமாணபல தேவர்தம்மொளியெ லா மும்மவ்வொளியு ளானவே. (கூஅ)

கண்டவிவ்வொளிகள் கொண்டவீசஞெளி கருதுகிட்கள சொரூபமுன், னண்டமானவை யடக்கும்வண்சிறைக ளசலகோ டியடவித்திடுக, துண்டமாயிர முகப்பகீரதி துலங்குசெஞ்சடையி ன் வெணபிறை, கணடமீதுறு கறுப்புவச்சிர கங்கள்விரமவி தந் தமும். (கூகூ)

சுழலுமங்கிசொரி கின்றமூன்றுவிழி துய்யசெவ்விதழ் மடித் துவாய், தழலின்மெய்கிற முகாந்தகாலம்வரு சத்தமேகவொலி வாயொலி, பழகுபல்லடை தரித்தகைகிரைகள் படிவம்வன்பறவை யிருகமா, கிழலசெய்தேவவுரு வாகிஞெஞ்சகள கேரிலோர்சரப மா னதே. (சo)

ஆனவச்சரப வடிவைவீரனு மணைந்தபோதுசெய செயவெ
ண, வானவக்குல முழக்கமேவசரப வடிவைமானிட மடங்கல்கண்,
டீனமாகியது வலியுடைந்தெழு முதயபானுமுன மின்மினி,
போனவித்ததயி லிறகினனனி புடைத்ததவீத்ததிகல் சிமபுளே.

கிட்டிகாபியை யடித்தலங்கொடு கிழித்துவண்கைகொடு மா
ர்பினைப், பட்டசோரியெழ வேபிளந்துடல பாகந்தோலினை யுரித்
தபின், துட்டமெய்யைநெடு வாலினைக்கொடு தொடக்கிவானிடை
சுழற்றியே, முட்டிப்புள்ளரச ராவினைக்கன முகடுகொண்டணுகு
மாறுபோல். (௪௨)

இந்தமாயன்மெ யெடுத்துவானிடை யெழுந்துமண்ணிடை
குதித்துட, னுந்துவானினிடை மன்னுமூற்றவ னுலாயதில்லைவன
மீதிலே, யந்தவாளரியி னுடலைவீழ்த்தினனவ் வமயவானவர்கை
கூப்பியே, சிந்தையேவுதுதி செப்பினார்கள்நர சிங்கமென்றசர
பேசன்முன். (௪௩)

இறுதியானவுரு விட்டுமுன்னையுரு வெய்தியுய்திபெறு நாரண,
னெறிபிறழ்ந்தெளிய னேனுரைத்தமொழி நிலவுநின்மதி பொறுத்
தியென், றறிவுவந்திருகை கட்டியுள்ளமிசை யச்சநாணமிக வணை
தரக், குறுகிநின்றுசர பேசன்மெய்ப்பெருமை கொண்டபண்டுது
தி கூறுவான். (௪௪)

வேறு.

மருவுபுகழுருத்திரனே சருவரா யுலகமெலாம் வாங்கு நாதா,
கருதுமுக் கிராகியச்சம விளைப்பவனே பவராய்ச்சங் கார ராகி
ப், பெருகிவரு காலமாய்க் காலனுக்குங் காலனும் பிரானே சூலத,
தருபடைசேர் கரவீர பத்திரனே சரணுனக்குச் சரண நானே,

சூக்குமராய்ப் பசுபதியாய்ப் பராபரராய் விசுவமொரு சொ
ரூப ராகி, யாக்குமகா தேவரா யொருமுதலாய் நீலகண்ட ராயு
லோகங், காக்குமிரி தனைச்சத்தி யாயுகந்தாய் நரமடங்கல் காய்ந்
தா யாய்ந்து, தாக்குவயி ரவசொருப சரபேச சரணுனக்குச் சர
ண நானே. (௪௬)

